# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 27 வியாழக்கிழமை 10.04.2025 கதிர் 163



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -

Yarl Muttram

Youtube Channel




## யாழில் கடும் நிபந்தனைகளுடன் திறக்கப்பட்ட வீதி





யாழ்ப்பாணம், ஏப். 10

யாழ்ப்பாணம், வசாவிளான் சந்தி முதல் பொன்னாலை - பருத்தித்துறை வீதி வரையிலான பலாலி வீதி கடுமையான நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளுடன் 35 ஆண்டுகளுக்குப் பின்னர் மக்கள் போக்குவரத்துக்காகத் திறந்து விடப்பட்டுள்ளது.

இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தின் ஊடாகச் செல்லும் சுமார் 2.5 கிலோ மீற்றர் நீளமான குறித்த வீதி கடந்த 1990ஆம் ஆண்டு

7➤

# பட்டலந்த வதை முகாம் சூத்திரதாரிகள் நிச்சயம் தண்டிக்கப்பட்டே ஆக வேண்டும்

## நாடாளுமன்றில் அமைச்சர் சந்திரசேகர் வலியுறுத்து

கொழும்பு, ஏப். 10

“1977 முதல் 1994 ஆம் ஆண்டுவரை இந்த நாட்டைக் கொலைக் களமாக்கிய ஐக்கிய தேசியக் கட்சி பாவிகளே, பட்டலந்த வதை முகாமின் சூத்திரதாரிகளும் கூட. எனவே, பட்டலந்த வதை முகாமின் பின்னணியில் இருந்தவர்கள் நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டும்.” - என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் வலியுறுத்தினார்.

பட்டலந்த வதை முகாம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றிய அமைச்சர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

7➤



## அச்சுவேலி கூட்டுறவுச் சங்கக் காணியும் விடுவிப்பு



யாழ்ப்பாணம், ஏப். 10

யாழ். அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக் காரியாலயக் கட்டடம் மற்றும் அதனைச் சூழவிருந்த சுமார் 8 பரப்புக் காணி இன்று இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 30 வருடங்களுக்கு மேலாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த குறித்த காணி மற்றும் அதனுள் இருந்த கட்டடம் என்பவற்றை வலிகாமம் கிழக்கு பிரதேச செயலரிடம் இராணுவத்தினர் இன்று உத்தியோகபூர்வமாகக் கையளித்த நிலையில், பிரதேச செயலரால்

7➤

## மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதானம்: விளையாட்டுத்துறை அமைச்சர் குழு கள விஜயம்

யாழ்ப்பாணம், ஏப். 10

யாழ்ப்பாணம், மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் ஒன்றை அமைப்பது தொடர்பாக இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே உள்ளிட்ட குழுவினர் கள விஜயமொன்றை இன்று மேற்கொண்டனர்.

7➤



## தென்னக்கோனுக்குப் பிணை



கொழும்பு, ஏப். 10

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனைப் பிணையில் விடுதலை செய்ய மாத்தறை நீதிவான் நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

10 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப்

7➤

## நிராகரிக்கப்பட்ட 35 வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளுமாறு நீதிமன்று உத்தரவு

கொழும்பு, ஏப். 10

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களை மீள ஏற்றுக்கொள்ளுமாறு உரிய தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, பிறப்புச் சான்றிதழ்களில்உள்ள குறைபாடுகளை வைத்து நிராகரிக்கப்பட்ட 35



வேட்புமனுக்களை மீளப் பெற்றுக்கொள்ளுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைத்

7➤

# பலாலி வீதி திறந்துவிடப்பட்டமை குறித்து சுமந்திரன் கேள்வி?



தேர்தல்கள் நெருங்கும போதுதான் வீதிகளை திறப்பீர்களா? என பலாலி வீதி திறந்துவிடப்பட்டுள்ளமை குறித்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

வசாவிளான் - பலாலி வீதி திறந்துவிடப்பட்டுள்ளமை குறித்த தனது சமூக ஊடக பதிவில் அவர் இந்த கேள்வியை எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் குறிப்பிட்டுள்ளதாவது,

கட்டுப்பாடுகளுடன் பலாலி வீதி திறக்கப்பட்டதை வரவேற்கின்றோம்.

ஆனால் சட்டத்தின் ஆட்சியை ஏற்படுத்துவதாக வாக்குறுதியளித்தவர்கள் கட்டுப்பாடுகளை விதிக்க முடியுமா?

இந்த பகுதி உயர்பாதுகாப்பு வலயமாக சட்டபூர்வமாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட பகுதியல்ல.

அவ்வாறு இருக்க மாலை ஆறு மணியிலிருந்து காலை 5 மணிவரை போக்குவரத்தை கட்டுப்படுத்துவதற்கு எந்த சட்டம் உங்களிற்கு அனுமதி வழங்கியது?

ஏன் பாதசாரிகள் இந்த வீதியை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கவில்லை? அதனை விட முக்கியமான கேள்வி, தேர்தல்கள் நெருங்கும் போதுதான் வீதிகளை திறப்பீர்களா? என பல கேள்விகளை எழுப்பியுள்ளார்.

# மோட்டார் சைக்கிள் மோதி இளைஞர் ஒருவர் உயிரிழப்பு




பண்டாரவளை, ஏப். 10

மோட்டார் சைக்கிள் மோதியதில் சுத்திகரிப்புத் தொழிலாளி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பதுளை, பண்டாரவளை வீதியில் பண்டாரவளை தம்ரோ காட்சியகத்துக்கு முன்பாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பண்டாரவளை மாநகர சபையில் பணியாற்றும் 36 வயது இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் சுத்திகரிப்பு தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையிலேயே அவர் மீது மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது.

படுகாயமடைந்த அவர், தியத்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பிறகு உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த 19 வயது இளைஞரும் காயமடைந்துள்ளார். அவர் தியத்தலாவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்து தொடர்பில் பண்டாரவளை பொலிஸார் விசாரணைகளை மேற கொண்டு வருகின்றனர்.

# இன்றும் உச்சம் கொடுக்கும் சூரியன்

வீழ்ச்சிப் பதிவாகக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. மேல் மற்றும் தென் மாகாணங்களிலும் புத்தளம் மாவட்டத்திலும் அவ்வப்போது மழை பெய்யக்கூடும்.

சப்ரகமுவ, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும், அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களிலும் பிற்பகல் அல்லது இரவு நேரங்களில் பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

இதேவேளை, சூரியனின் வடதிசை நோக்கிய இயக்கத்தின் காரணமாக,இம்மாதம் 14 ஆம் திகதி வரை இலங்கையின் அகலாங்குகளுக்கு நேராகச் சூரியன் உச்சம் கொடுக்கவுள்ளது.

அதற்கிணங்க இன்று நண்பகல் 12.11 அளவில் ஹத்திகுச்சி, கலங்குட்டிய, ஹல்மில்லேவ, இபலோகம, பலுகஸ்வெவ, ஹபரணை ஆகிய பகுதிகளுக்கு நேராகச் சூரியன் உச்சம் கொடுக்கவுள்ளது.

(ஐ)

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிமை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden - Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# அதிவேக நெடுஞ்சாலை பயணத்தில் வங்கி அட்டை மூலம் பணம் செலுத்தும் திட்டம்!



கொழும்பு, ஏப் 10

அதிவேக நெடுஞ்சாலை பயணத்திற்கான கட்டணங்களை வங்கி அட்டையை பயன்படுத்தி செலுத்தும் திட்டம் இந்த வாரம் தொடங்கப்படும் என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி கொட்டாவ மற்றும் கடவத்தை இடமாறும் பகுதிகளுக்கு இடையே ஆரம்பிக்கப்படவுள்ள இந்த முன்னோடி திட்டத்தின் போது, பயணத்திற்கான கட்டணங்களை டெபிட், கடனட்டை மற்றும் ஞசு குறியீடுகளைப் பயன்படுத்தி மேற்கொள்ள முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முன்னோடி திட்டத்தை தொடர்ந்து, மே மாதம் முதல் நாட்டிலுள்ள அனைத்து அதிவேக நெடுஞ்சாலைகளிலும் வங்கி அட்டை மூலம் பணம் செலுத்த நடவடிக்கை எடுக்க எதிர்பார்ப்பதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சீனா தவிர்ந்த ஏனைய நாடுகள் மீது விதிக்கப்பட்ட வரியை 90 நாட்களுக்கு நிறுத்தி வைப்பதாக ட்ரம்ப் அறிவிப்பு!



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பினால் இலங்கை உட்பட பல நாடுகள் மீது விதிக்கப்பட்டிருந்த வரி கொள்கையை 90 நாட்களுக்கு நிறுத்தி வைப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் சீனா தவிர்ந்த ஏனைய நாடுகள் மீது விதிக்கப்பட்ட வரி கொள்கையே 90 நாட்களுக்கு நிறுத்தி வைப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சீன இறக்குமதிகள் மீதான வரிகள் 125% ஆக உயர்த்தப்படுவதாக ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

சீனப் பொருட்களுக்கு ஆரம்பத்தில் விதிக்கப்பட்டிருந்த 10 சதவீத வரிகளை மார்ச் மாதம் 2ஆம் திகதி 20 சதவீதமாக ட்ரம்ப் உயர்த்தினார்.

அதன்பின்பு, பரஸ்பர வரிவிதிப்பு என்ற வகையில் கடந்த வாரம் 34 சதவீத கூடுதல் வரியை சீன மீது விதித்தார்.

இதனால் சீன பொருட்கள் மீதான இறக்குமதி வரியானது 54 சதவீதமாக உயர்ந்தது.

அமெரிக்காவின் நடவடிக்கைக்கு பதிலடியாக சீனாவும் 34 சதவீத கூடுதல் வரி விதிப்பதாக அறிவித்தது.

இதனால் கடும் அதிருப்தி அடைந்த ட்ரம்ப், சீன இறக்குமதிக்கு கூடுதலாக 50 சதவீத வரி விதித்தார்.

இதன் மூலம் சீனாவில் இருந்து, அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு விதிக்கப்படும் மொத்த வரி 104 சதவீதமாக அதிகரித்தது.

இந்த வரிவிதிப்பு நேற்று முதல் நடைமுறைக்கு வந்தது. இதனால் உலக அளவில் பெரும் வர்த்தகப்போர் ஏற்பட்டுள்ளது.

இதற்கும் அசராத சீனா, மேலும் 50 சதவீத வரியுடன் அமெரிக்க பொருட்கள் மீதான வரியை 84 வீதமாக அதிகரிப்பதாக நேற்று அறிவித்தது.

அத்துடன், அமெரிக்க இராணுவத்திற்காக பணிபுரியும் இரண்டு நிறுவனங்கள் உட்பட 11 நிறுவனங்களுக்கு இரட்டை பயன்பாட்டு பொருட்களை விற்க சீனா தடை விதித்துள்ளது.

இந்த நிலையிலேயே சீன இறக்குமதிகள் மீதான வரிகள் 125 சதவீதம் உயர்த்தப்படுவதாக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் அறிவித்துள்ளார்.

## காங்கேசன்துறை சந்தி வரை சேவையை ஆரம்பிக்கவுள்ள 764ஆம் இலக்க தனியார் பேருந்து!





764ம் இலக்க தனியார் பேருந்து சேவை இனிமேல் காங்கேசன்துறை வரை பயணிக்கும் என, 764ம் இலக்க தனியார் பேருந்து சேவையின் முன்னாள் தலைவர் அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

வசாவிளான் - பலாலி வீதி விடுவிக்கப்பட்டமை குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இந்த பாதை விடுவிக்கப்பட்டமை சந்தோஷகரமான, வரவேற்கத்தக்க நிகழ்வு.

இதுவரையில் எமது பேருந்து சேவை வசாவிளான் வரையில் சேவையில் ஈடுபட்டது. இனிமேல் காங்கேசன்துறை வரைக்கும் சேவையில் ஈடுபடும். மீண்டும் அதே மார்க்கம் ஊடாக யாழ்ப்பாணம் வரை பயணிக்கும் என தெரிவித்தார்.

இந்த பயண சேவை தொடர்பில் படிப்படியாக எமது சேவை அட்டவணைகளை மாற்றியைப்போம். குறித்த பாதை பூட்டப்படுவதற்கு முன்பு காங்கேசன்துறை சந்தியில் இருந்து எமது தனியார் பேருந்து சேவை இயங்கியதை போலவே மீண்டும் எமது சேவைகளை மேற்கொள்வோம்.

அந்தோனிபுரம், மயிலிட்டி பகுதியில் வசிக்கும் மக்கள் இந்த சேவையை பயன்படுத்திக்கொள்ளும் வகையில் அடுத்த இரண்டு மூன்று நாட்களுள் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு விசேட பாதுகாப்பு திட்டம்!

தமிழ், சிங்கள புத்தாண்டை பொதுமக்கள் பாதுகாப்பிற்காக விசேட பாதுகாப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

அதன்படி, 35,000இற்கும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் தொகை அதிகம் உள்ள நகரங்களில், சிவில் உடையில் புலனாய்வு பிரிவு அதிகாரிகளை பணியில் ஈடுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைக்காக போக்குவரத்து பொலிஸார் உட்பட சுமார் 6,000 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## படலந்த ஆணைக்குழு அறிக்கை மீதான விவாதம் இன்று!

கடந்த 14 ஆம் திகதி படலந்த ஆணைக்குழு அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையில், படலந்த ஆணைக்குழு அறிக்கை மீதான நாடாளுமன்ற விவாதம் இன்று (10) நடைபெறுகின்றது.

இன்று காலை 9.30 மணி - 10.00 மணி வரை நிலையியற் கட்டளைகள் 22இன் 1 முதல் 6 வரை குறிப்பிடப்பட்டுள்ளவாறு நாடாளுமன்ற அலுவல்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

காலை 10.00 மணி முதல் 11.00 மணி வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

காலை 11.00 மணி முதல் 11.30 மணி வரை நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் வினாக்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

காலை 11.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை 'பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் சட்டவிரோத தடுப்பு மையங்கள் மற்றும் சித்திரவதை அறைகளை நிறுவிய மற்றும் பராமரித்தல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை' மீதான விவாதம் இடம்பெறவுள்ளது.

படலந்த ஆணைக்குழு அறிக்கை மீதான இரண்டாவது நாள் விவாதம், மே மாதத்தின் மற்றொரு நாளில் நடாத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இன்றைய நாடாளுமன்ற அமர்வுக்கு பின்னர், அடுத்த நாடாளுமன்ற அமர்வு மே மாதம் 8ஆம் திகதி நடைபெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஏப்ரல் 15 விடுமுறையா? அரசு வெளியிட்ட தகவல்!

ஏப்ரல் 15 ஆம் திகதி அரச விடுமுறை தினமாக அறிவிப்பது குறித்து இன்னும் எந்தவொரு தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை என பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

இன்றைய (10) நாடாளுமன்ற அமர்வின் போது, நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் குறிப்பிடுகையில்,

எதிர்வரும் 18ஆம் திகதி பெரிய வெள்ளி என்பதால், குறித்த வாரத்தில் மூன்று நாட்கள் மட்டுமே வேலை நாட்கள் காணப்படுகிறது. எனவே, 15ஆம் திகதி குறித்து இன்னும் எந்த தீர்மானமும் எடுக்கவில்லை என அமைச்சர் குறிப்பிட்டார்.

அத்துடன், ஏப்ரல் 15ஆம் திகதி அரச விடுமுறை தினமாக அரசாங்கம் அறிவித்துள்ளதாக சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வரும் செய்தி பொய்யானது என்றும், இது தொடர்பில் அரசாங்கம் எந்தவொரு உத்தியோகபூர்வ அறிவித்தலையும் வெளியிடவில்லை எனவும் அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு குறிப்பிட்டுள்ளது.

# நானே பா.ம.க., தலைவர்: தனது மகனது தலைவர் பதவியை பறித்தார் ராமதாஸ்



"பா.ம.க., தலைவர் பதவியையும் நானே எடுத்து கொள்கிறேன். பா.ம.க.,வின் தலைவராக பொறுப்பு வகித்து வரும் அன்புமணியை பா.ம.க.,வின் செயல் தலைவராக நியமனம் செய்கிறேன்" என அக்கட்சி நிறுவனர் ராமதாஸ் அறிவித்தார்.

பா.ம.க., கட்சியின் தலைவராக அன்புமணி இருந்து வந்தார். இந்நிலையில் இன்று (ஏப்ரல் 10) மகனது தலைவர் பதவியை பா.ம.க., நிறுவனர் ராமதாஸ் பறித்து கொண்டார். இது குறித்து விழுப்புரத்தில் நிருபர்கள் சந்திப்பில் ராமதாஸ் கூறியதாவது: பா.ம.க., தலைவர் பதவியையும் நானே எடுத்து கொள்கிறேன்.

தேர்தலின் வெற்றிக்காக, அயராது உழைக்க வேண்டும் என்ற நோக்கில், பா.ம.க.,வின் தலைவராக பொறுப்பு வகித்து வரும் அன்புமணியை பா.ம.க.,வின் செயல் தலைவராக நியமனம் செய்கிறேன். பா.ம.க.,கட்சியினர் ஒற்றுமை உணர்வுடன் தீவி ரமாக செயல்பட்டு, தேர்தல் வெற்றிக்கு பணியாற்ற வேண்டும்.

நான் தலைவராக பொறுப்பேற்றதற்கு காரணங்கள் பல உண்டு. எல்லாவற்றையும் உங்களிடம் கூற முடியாது. பதவி பெறும் ஆசை எனக்கில்லை. தேர்தலை முன்னிட்டு இளைஞர்களை வழிநடத்த இந்த முடிவு. கூட்டணி குறித்து பொதுக்குழுவில் முடிவெடுப்போம். இவ்வாறு ராமதாஸ் கூறினார்.

கடந்தாண்டு டிசம்பர் 28ம் தேதி, புதுச்சேரியில் நடந்த பா.ம.க., பொதுக்குழு கூட்டத்தில், மேடையிலேயே அக்கட்சி நிறுவனர் ராமதாசுக்கும், அவரது மகன் அன்புமணிக்கும் இடையே, நேரடியாக மேடையிலேயே வார்த்தை போர் வெடித்தது. இது அரசியல் களத்தில் பேசும் பொருளானது.

மறுநாள், தைலாபுரம் தோட்டத்தில் தந்தையுடன் அன்புமணி சமரசம் பேச்சுவார்த்தை நடத்தினார். 'ஜனநாயக கட்சியில் விவாதம் நடப்பது சகஜம் தான்' என தந்தையை சந்தித்த பின், நிருபர்கள் சந்திப்பில் அன்புமணி விளக்கம் அளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து பா.ம.க., பொருளாளர் திலகபமா வெளியிட்டுள்ள அறிக்கை: பா.ம.க.,வின் ஜனநாயகம் கொலை செய்யப்பட்டுள்ளது. இதுவரை ராமதாஸ் எடுத்த எல்லா முடிவுகளும் சரியே. அவரின் அன்பினை ருசித்தவள் நான் . ஆனால் இந்த முடிவு தவறு. 'அன்புதானே எல்லாம்'. இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ஐ)

## அமித்ஷா வருகைக்கான காரணம் நாளை தெரியும்: அண்ணாமலை பேட்டி



''மாநில தலைவர் தேர்தலுக்கும், அமித்ஷா வருகைக்கும் தொடர்பில்லை. வருகைக்கான காரணம் நாளை தெரியும்'' என தமிழக பா.ஜ., தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

நிருபர்: மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா வருகிறார். இந்த பயணத்தின் போது புதிய மாநில தலைவர் அறிவிக்க வாய்ப்பு இருக்கா? அ.தி.மு.க., உடன் சந்திக்க வாய்ப்பு இருக்கிறதா?

அண்ணாமலை: மத்திய உள்துறை அமைச்சர் வருவது உறுதி. இன்று இரவு வருகிறார்கள். நாளை மாலை வரை இருக்கிறார்கள். எதற்கு வந்து இருக்கிறார் என்று நாளை அதிகாரபூர்வமாக தெரிவிப்போம். மாநில தலைவர் தேர்தலுக்கும், அமித்ஷா வருகைக்கும் சம்பந்தமில்லை.

அவர் வருவது கட்சியின் தலைவர்களை சந்திப்பதற்கு, எப்போதும் அவர் சந்திப்பார். பீஹாரில் 4 நாட்கள் இருந்தார். கூட்டணி கட்சி தலைவர்களை சந்தித்தார். அரசியல் நிலவரங்கள் குறித்து கேட்டு தெரிந்து கொண்டார். தமிழகத்திலும் அதே போன்ற பயணமாக தான் பார்க்க வேண்டும். முறைப்படி நாளை பத்திரிகையாளர்களை சந்தித்து தெரிவிப்போம்.

நிருபர்: முதல்வர் ஸ்டாலின் அனைத்துக் கட்சி கூட்டம் நடத்தினார். நீட் தேர்வுக்கு எதிராக சட்ட போராட்டம் தொடரும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அண்ணாமலை: தீர்மானம் நிறைவேற்றுவது புதிது கிடையாது. இதற்கு முன்பு கூட தீர்மானம் நிறைவேற்றினார்கள். நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஜனாதிபதிக்கு தான் போகிறது. மாநில அரசு அனுப்பிய தீர்மானத்தை ஜனாதிபதி திரும்ப அனுப்பினார்.

எங்களை பொறுத்தவரை நீட் தேர்வு நல்லது தான் செய்து கொண்டு இருக்கிறது. ஏழை மாணவர்கள் நீட் தேர்வால் அரசு மருத்துவக் கல்லூரிக்கு போய் கொண்டு இருக்கிறார்கள். இன்றைக்கு நீட் விவாதம் தேவையற்றது. இதனால் தான் அனைத்து கட்சி கூட்டத்தில் பா.ஜ., பங்கேற்கவில்லை.

நிருபர்: தமிழக அரசு தொடர்ந்த வழக்கில், சுப்ரீம் கோர்ட் அளித்த தீர்ப்பு கவர்னருக்கு பின்னடைவா?

அண்ணாமலை: பின்னடைவாக நான் பார்க்கவில்லை. சுப்ரீம்கோர்ட்டின் தீர்ப்பு முக்கியமானது தான். மசோதா விவகாரத்தில் காலநிர்ணயத்தை சுப்ரீம்கோர்ட் விதித்துள்ளது.

சுப்ரீம்கோர்ட்டின் தீர்ப்பிற்கு தலை வணங்கி தான் ஆக வேண்டும். இது நாட்டின் அடிப்படை. 10 மசோதாக்களுக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது. கவர்னர் தொடர்ந்து தனது கடமையை செய்வார்கள். (ஐ)

## தமிழகத்தில் வெப்பம் அதிகரிக்கும்:வானிலை மையம் எச்சரிக்கை

தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் 2 – 3 செல்சியஸ் இயல்பை விட அதிகமாக இருக்கக்கூடும்,'' என சென்னை வானிலை மையம் கூறியுள்ளது.

இதுகுறித்து, வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டலத் தலைவர் பி. அமுதா கூறியதாவது: தமிழகத்தில் கடந்த 24 மணி நேரத்தில் கன்னியாகுமரியின் மைலாடி, கொட்டாரம் பகுதியில் தலா 6 செ.மீ., கன்னிமார், மாம்பழத்துறையாறு பகுதிகளில் தலா 4 செ.மீ., மழை பதிவாகி உள்ளது.

வெப்பநிலையை பொறுத்த வரை அதிகபட்சமாக வேலூரில் 38.5 டிகிரி செல்சியசும், குறைந்தபட்சமாக கரூர் பரமத்தியில் 21.5 டிகிரி செல்சியசும் பதிவாகியது.


நேற்று மத்திய மேற்கு மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, வடக்கு திசையில் நகர்ந்து, மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் மாலை 5:30 மணியளவில் காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலு குறைந்து இன்று காலை 8:309மணியளவில் காற்றழுத்த தாழ்வு பகுதியாக அதே பகுதிகளில் நிலவுகிறது. இது அடுத்த 12 மணி நேரத்தில் வடக்கு வடகிழக்கு திசையில் நகர்ந்து மத்திய வங்கக்கடல் பகுதிகளில் படிப்படியாக வலுவிழக்கக்கூடும்.

இன்று( ஏப்.,10) முதல் 12 வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கோவை மாவட்ட மலைப்பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

இன்றும் நாளையும் தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் 2 – 3 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகரில், இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிபட்ச வெப்பநிலை 36– 37 டிகிரி செல்சியசை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 26–27 டிகிரி செல்சியசை ஒட்டியும் இருக்கக்கூடும். இவ்வாறு அந்த அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.(ஐ)

# பூக்கள் பூத்த தருணம்!



உலகம் முழுக்க உயிர்கள் நிரம்பியிருக்கவும் வீடு முழுக்க மகிழ்ச்சி நிரம்பியிருக்கவும் அவசியமானது யாராவது சோறு ஆக்கிவைத்திருத்தல். வீட்டில் ஒருவர் சமைத்து வைத்திருப்பார் என்றால் தைரியமாக கால தாமதமாக வீடு வந்து சேரலாம்.

அதுபோலத்தான் விலங்கினங்கள் தைரியமாக கடலை விட்டு கரை ஏறி வரும்போது கரையில், நிலத்தில் உணவு தயாராக இருந்தது. தாவரங்கள் என்னும் பெயரில்.

விலங்குகளின் பரிணாமம் மிகத் தாமதமான ஒன்று. மெல்ல அவை தண்ணீரை விட்டு தரைக்கு நகர்ந்த காலகட்டத்தில், தாவரங்கள் அதன் பரிணாம வளர்ச்சியில் வெகுதூரம் சென்றிருந்தன. தாவரங்களின் பரிணாமத்தின் உச்சமாக அவை விதைகளை உருவாக்கும் அளவு முன்னேறியிருந்தன.

சிறு பாசி இனங்களாக வளரத் தொடங்கியவை, மெல்ல தரைக்கு வந்து புல், புதர், செடி, கொடி, மரம் என தங்கள் எல்லையை பூமியில் நீட்டித்திருந்தன. அவையே உணவு உற்பத்தியாளர்கள். பச்சை நிற குளொரோபில்கள் உற்பத்தி செய்துதரும் கரிமப்பொருள் தான் உலகில் உணவு என்னும் பதத்தின் ஆதிப்புள்ளி.

இத்தகைய தாவரங்களுக்குள் போட்டி உண்டா என்றால் உண்டு. வம்புக்கதைகள் பேசி மகிழ்ந்திருக்குமா என்றால், ஆம் மகிழ்ந்திருக்கும். தாவரங்களால் துன்பம் என வந்தால் ஓட முடியாது. அப்போது அவை சண்டையிடுமா என்றால் சண்டையிடும். பேசாத உணர்வற்ற எதிர்ப்பற்ற தன்மைக்கு நாம் மரத்துப் போதல் என பெயரிட்டு இருக்கிறோம். எத்தனை புரிதலற்ற அவதானிப்பு. ஆனால் தாவரங்கள் தங்களுக்குள் பேசிக் கொள்பவை,போடியிடுபவை, சண்டை செய்பவை, துன்பத்திற்கு எதிர்த்து நிற்பவை. நம்மைப்போன்றே நிலைத்திருக்கவும் இனத்தினை ( சிற்றினம் –ளிநஉநைள) பெருக்கவும் விழைபவை.

தாவரங்கள் சில வேதிப்பொருள்கள் மூலம் பக்கத்து தாவரத்திற்கு சமிக்கைகள் தரும். பழம் பழுப்பது இதற்கொரு நல்ல எடுத்துக்காட்டு. ஒரு மரத்தின் பழம் பழுக்கத் தொடங்கும்போது வெளிவரும் எத்திலீன் வாயு அருகமைந்த மற்ற பழங்களையும் பழுக்கச் செய்யும் (அரிசி டப்பாவில் போட்டால் பழத்தை அரிசி பழுக்கவைப்பதாக நாம் நம்பிக்கொள்கிறோம். சூடு என்போம். அது இந்த வாயுதான்).

சில வைரஸ்கள் தாக்கத் தொடங்கும்போது, அருகமைந்த தாவரத்துக்கு வாயுக்களை வெளியிட்டு முட்டைக்கோசுகள் தங்களுக்குள் செய்தி பரிமாறிக்கொள்வதை வெகு சமீபத்தில் அறிவியல் ஆய்வுகள் நிரூபித்துள்ளன.

கிருமிகள், பூச்சி ரகங்கள் போன்றவை தாக்கும்போது தாவரம் முற்றிலும் அழியும் நிலை நேரிடும். அப்போது தாவரங்கள் என்ன செய்யும்? தன்னிடம் எதற்காக விரும்பி எதிரி வருகின்றதோ அதற்கு நேரமாறான விஷயத்தைத் தரும். இனிப்பான தேனிற்கு பதிலாக கசபபான வேதிப் பொருள் களை உடல் முழுதும் பரப்பி வைத்துக் கொள்ளும். டீ இலையின் துவர்ப்புச் சுவை நமது காலையை வேண்டுமானால் அழகாக்கலாம், அதன் இலைகளை அழிக்கவரும் பூச்சியினங்களுக்கு அவை விருந்தாக அமைவதில்லை.

புழு ஊர்ந்து வருகின்றதா, முட்களை உண்டாக்கிக் கொள்ளும். தோல் பகுதியில் கீறல் விழுந்து விடுகிறதா? கோந்து, ரப்பர் போன்ற பொருள்களை உருவாக்கிக் கொள்ளும். வாசனை அடிப்படையில் எறும்புகள், கரையான்கள் தங்களுக்குள் தொடர்பு கொண்டு மரத்தின் உச்சிக்கு வரப்பார்க்கின்றனவா? மரப்பட்டையில் சில வாசனைகளை உண்டாக்கிவிடும் மரம். எறும்புகள், கரையான்கள் குழம்பி ஓடிப்போகும்.

இவையெல்லாமே அந்த நொடியில், அந்த இடத்தில் யார் வாழ்வது யார் யாருக்கு பலியாவது என்பதற்கான போர்கள்தான். பரிணாமம் நகர்பவைகளுக்கு ஒரு விதமானது என்றால், ஒரே இடத்தில் நின்று சிக்சரடிக்கும் தாவரங்களுக்கோ வேறுவிதமானது.

சரி அடிப்பதும் கெடுப்பதுமான திட்டங்கள் பெற்ற தாவரங்களை நம்பியா நாம் கரை ஏறி வந்தோம் என்றால், அதுதான் இல்லை. நமக்கான உணவாக தாவரங்கள் திகழத்தான் செய்தன. அதற்கு பதிலாக நாமும் கூலி கொடுத்தோம்.

தாவரங்கள் தங்கள் உடல் வழியாக செய்து கொண்டிருந்த இனப்பெருக்கத்தைவிட ,மலர்கள் வழியாக செய்த இனப்பெருக்கம் அவற்றின் பரவலுக்கு மிக முக்கியமான காரணமாகும். தளைவழி இனப்பெருக்கம் **( Vegetative Reproduction)** குறுகிய பரப்புக்கானது. மரபியல் வழி நிறைய புதுப்புது ரகங்கள் உருவாகாது **( Absence of variation).**

தாவரங்கள் தங்கள் வெகுதூர கனவு நிலங்களுக்குச் செல்ல ஆசைப்பட்டன. அவை பூக்கத் தொடங்கின. அவற்றுக்கு விமானங்கள் வேண்டும். பறவைகளாக பூச்சிகளாக, தேனீக்களாக குரங்குகளாக–

தேனீக்கள், வண்டுகள் இருந்தால்தான் பெரும்பாலான தாவரங்கள் மகரந்தச் சேர்க்கை மூலம் இனப்பெருக்கம் செய்யமுடியும். வழக்கமாக துரத்திவிட்டுத்தானே பழக்கம்– என்ன செய்வது? வண்ண மலர்களை வைத்து கவர்ந்திழுப்பதுதான் திட்டம். வந்து சிக்குபவர்களுக்கு தேன் தந்து உபசரிப்பது அப்படியே வழிப்பயணத்திற்கு மகரந்தத்தூளினை அப்பி அனுப்புவது என தங்களது இனப்பெருக்கத்தினை தொடர்ந்தன.

இப்போது யார் யாரைக் கவர்வது என்னும் போட்டி. தேனீக்களுக்கு நீல வண்ண மலர்கள், வண்டுகளுக்கு வெள்ளை, சந்தன நிறப்பூக்கள்– பட்டாம்பூச்சிகளுக்கு பிரகாசமான மஞ்சள் ஆரஞ்சு போன்ற நிறங்கள் கண்ணுக்குப் புலனாகும் என்பதால், இந்த நிறப்பூக்கள் உடைய தாவரங்கள் செழிப்புற பரவின.

இரவு நேரத்து பூச்சியினங்களுக்காக இருளில், இரவில் வெள்ளை நிறப் பூக்கள் தோன்றின. அவை இருக்கும் இடம் பளிச்சென தெரிய வேண்டி, அடர்வாசனைகளை அந்த பூக்கள் உற்பத்தி செய்தன. இதன் காரணமாக விலங்குகளுக்கு தேன், கனிகள் (மகரந்தச்சேர்க்கை நடந்தால் மட்டுமே கனி உருவாகும்), விதைகள் (உலகின் பாதி உணவு அரிசி கோதுமை போன்ற விதைகளே) போன்றவை கிடைத்தன. விலங்குகள் செழிப்புற வளர்ந்து பரிணமித்தன. அதேசமயம் தாவர பெருக்கமும், தாவர ரகவகைகள் பெருக்கமும் கூடவே பல்கிப்பெருகின.

உயிர்கள் தங்களது வாழ்வு நிலைபெற சூழலுக்குத் தக்கவாறு தங்கள் வளர்ச்சி, செயல்பாடு, இனப்பெருக்க எதிரிகள் எதிர்ப்பு என அனைத்தையும் தகவமைத்துக் கொண்டன. ஒன்றுடன் ஒன்று ஏதேனும் ஒருவிதத்தில் இணைந்தும் சார்ந்திருந்துமே இயங்குகின்றன.

நன்மை செய்பவர்களுக்கு நல்லவிதமாகவும், தனக்கு எதிரானவர்களுக்கு எதிர்விதமாகவும் தானாகவே செயல்படும் தன்மை இயற்கையில், பரிணாமவளர்ச்சிப் படி அமைந்தது.

சிந்தனைத்திறன் இல்லை என இப்போது வரை நம்பப்படும் தாவரங்கள், இத்தகைய தெளிவான வாழ்வமைப்பினை கொண்டுள்ளபோது, மனிதர்களின் மனமும் சிந்தனையும் எப்படியெல்லாம் பரிணமித்து வந்திருக்கும்?

**“ விலங்குக ளின் பரிணாமம் மிகத் தாமதமான ஒன்று. மெல்ல அவை தண்ணீரை விட்டு தரைக்கு நகர்ந்த காலகட்டத்தில், தாவரங்கள் அதன் பரிணாம வளர்ச்சியில் வெகுதூரம் சென்றிருந்தன. தாவரங்களின் பரிணாமத்தின் உச்சமாக அவை விதைகளை உருவாக்கும் அளவு முன்னேறியிருந்தன. சிறு பாசி இனங்களாக வளரத் தொடங்கியவை. மெல்ல தரைக்கு வந்து புல், புதர், செடி, கொடி, மரம் என தங்கள் எல்லையை பூமி யில் நீட்டித்திருந்தன. அவையே உணவு உற்பத்தியாளர்கள். பச்சை நிற குளொரோபில்கள் உற்பத்தி செய்துதரும் கரிமப் பொருள் தான் உலகில் உணவு என்னும் பதத்தின் ஆதிப்புள்ளி**



## வங்கதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு எதிராக மீண்டும் பிடிவாரண்ட்



வங்கதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா மற்றும் அவரது மகள் சைமா வாஜேத் புதுல் மற்றும் 17 பேருக்கு எதிராக குடியிருப்பு நிலத்தை கையகப்ப டுத்துவது தொடர்பான ஊழல் வழக்கில் கைது வாரண்ட் பிறப்பித்து நீதிமன்றம் உத்தரவிட்டு உள்ளது.

மாணவர்கள் போராட்டம் காரணமாக வங்கதேச பிரதமர் பதவியில் இருந்து விலகிய ஷேக் ஹசீனா இந்தியாவில் தஞ்சம் புகுந்து உள்ளார். ஊழல் குற்றச்சாட்டின் கீழ் அவருக்கு எதிராக வங்கதேச நீதிமன்றம் பிடிவாரண்ட் பிறப்பித்து உள்ளது. இதனையடுத்து அவரை தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என வங்கதேச இடைக்கால அரசு, இந்தியாவிடம் கோரிக்கை வைத்து உள்ளது.

இந்நிலையில், ஷேக் ஹசீனா , மகன் சைமா வாஜெத் புதுலு ஆகியோர் மீது அந்நாட்டின் ஊழல் தடுப்பு ஆணையம் சட்டவிரோதமாக குடியிருப்பு நிலத்தை கையகப்படுத்தியதாக குற்றம்சாட்டியது. இருவரும் தலைமறைவாக இருப்பதாக, ஊழல் தடுப்பு ஆணையம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. இதனை ஏற்றுக் கொண்ட டாகா சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஜாகிர் ஹுசைன் கலிப், இருவருக்கும் எதிராக பிடிவாரண்ட் பிறப்பித்து உத்தரவிட்டார். மேலும், இது தொடர்பான குற்றச்சாட்டை விசாரிக்க, மே 4 ஆம் தேதி விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்குமாறு ஊழல் தடுப்பு ஆணையத்திற்கு நீதிபதி உத்தரவிட்டு உள்ளார். (ஐ)

## சீன அதிபர் புத்திசாலி நபர்: அதிபர் டிரம்ப் பாராட்டு




ஒரு புறம் சீனாவுடன் வரி விதிப்பு யுத்தம் செய்யும் டிரம்ப், சீன அதிபர் ஜின்பிங்யை புத்திசாலி நபர் என பாராட்டி உள்ளார்.

டிரம்ப் பதவி ஏற்ற போதே தங்களுக்கு வரி விதிக்கும் நாடுகளுக்கு அதே அளவு வரி விதிக்கப்படும் என்று எச்சரித்தார். அடுத்தடுத்து சீனாவுக்கு வரி மேல் வரி போட்டார். சீனாவும் பதிலுக்கு வரி போட துவங்கியது. சீனாவுக்கான அமெரிக்காவின் மொத்த வரி 104 சதவீதமாக உயர்ந்தது.

இதனால் சீனா, ஏற்கனவே அறிவித்த 34 சதவீதம் வரியுடன் 50 சதவீதத்தை சேர்த்து ஒரே நேரத்தில் 84 சதவீத வரியை அறிவித்தது. தற்போது சீனாவுக்கு கூடுதலாக 21 சதவீதம் வரி போட்டு, மொத்த வரியை 124 சதவீதமாக டிரம்ப் உயர்த்தி விட்டார். ஒரு புறம் சீனாவுடன் வரி விதிப்பு யுத்தம் செய்யும் டிரம்ப், சீன அதிபர் ஜின்பிங்யை புத்திசாலி நபர் என பாராட்டி உள்ளார்.

இது குறித்து நிருபர்கள் சந்திப்பில் டிரம்ப் கூறியதாவது: சீன அதிபர் ஜின் பிங் புத்திசாலி நபர். என்ன செய்ய வேண்டும் என்பது சீன அதிபர் ஜின் பிங்கிற்கு தெரியும். தன் நாட்டை நேசிப்பவர். விரைவில் அவரிடம் இருந்து எங்களுக்கு தொலைபேசி அழைப்பு வரும். போட்டி முடிவுக்கு வரும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.(ஐ)



## காசாவின் மிகப்பெரிய பகுதிகளை கைப்பற்றியது இஸ்ரேல் வான்வழி தாக்குதலில் 23 பேர் பலி

பாலஸ்தீனத்தில் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேல் ராணுவம், காசாவில் மிகப்பெரிய பகுதிகளை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்து விட்டதாக அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த 2023ல் இஸ்ரேல் மீது பாலஸ்தீன ஆதரவு அமைப்பான ஹமாஸ் தாக்குதல் நடத்தியது. அந நாட்டிற்குள் புகுந்து தொடர் தாக்குதல் நடத்தியதுடன், 200க்கும் மேற்பட்டோரை பிணைக் கைதிகளாக பிடித்துச் சென்றது. பதிலுக்கு இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் மற்றும் ஹமாஸ் பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

ஒன்றரை ஆண்டுகளாக இந்த போர் நீடித்து வரும் நிலையில், கடந்த ஜனவரியில், 42 நாட்களுக்கான முதற்கட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. அது முடிந்தபின், போர் நிறுத்தத்தை நீட்டிப்பதற்கான ஒப்பந்தத்தில் இஸ்ரேல் பல்வேறு நிபந்தனைகள் விதித்தது. ஹமாஸ் அதை ஏற்கவில்லை. இதைத் தொடர்ந்து ஹமாஸ் அமைப்பினர் மீது இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதலை தீவிரப்படுத்தி வருகிறது.

இந்நிலையில், காசாவில் மிகப்பெரிய பகுதிகளை ராணுவம் கைப்பற்றி விட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. இதன்மூலம் பாலஸ்தீனம் தனிமைப்படுத்தப்பட்டு விட்டதாகவும் கூறியுள்ளது. மேலும், காசாவில் குடியிருப்பு பகுதியில் இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் 23 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இது குறித்து இஸ்ரேல் பாதுகாப்புத் துறை அமைச்சர் காட்ஸ் கூறுகையில், 'காசாவில் உள்ள மிகப்பெரிய பகுதிகள் கைப்பற்றப்பட்டது. அந்தப் பகுதிகள் எங்களின் ராணுவம் கட்டுப்பாட்டில் உள்ளது. பாலஸ்தீனம் சிறுமைப்படுத்தப்பட்டு, தனித்து விடப்பட்டுள்ளது.

பிணையக் கைதிகளை விடுவிக்கும் வரையிலோ அல்லது ஹமாஸ் பயங்கரவாதிகளை வீழ்த்தும் வரையிலோ இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தும்,' எனக் கூறினார்.


இதனிடையே, விரைவில் பாலஸ்தீனத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு அரசை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரோன் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இது இரண்டாவது மிகப் பெரிய தவறு: ரஷ்யா மீது ஜெலன்ஸ்கி குற்றச்சாட்டு

உக்ரைன் நாட்டின் மீது தாக்குதல் நடத்திய ரஷ்யா, அந்நாட்டின் கணிசமான நிலப்பரப்பை கைப்பற்றி தங்கள் வசம் வைத்துள்ளது. ஐரோப்பிய நாடுகள் உதவியுடன் உக்ரைன் ராணுவமும் பதில் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த போரில் ரஷ்ய ராணுவம் சார்பில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த கூலிப்படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுகள் எழுந்தது.

ரஷ்யா வட கொரியாவை சேர்ந்தவர்களை வைத்து உக்ரைன் மக்கள் மீது தாக்குதல் நடத்துகிறது என அண்மையில் ஜெலன்ஸ்கி புகார் கூறியிருந்தார். சில தினங்களுக்கு முன் ரஷ்யா ராணுவத்துக்காக போரிட்ட சீனர்கள் இருவரை உக்ரைன் ராணுவம் கைது செய்தது. இது குறித்து நிருபர்கள் சந்திப்பில் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கூறியதாவது:

இது ரஷ்யாவின் இரண்டாவது தவறு. முதலாவது வட கொரியா. இப்பொழுது சீனாவை இந்த போருக்கு இழுக்கிறார்கள். இது ரஷ்யாவின் இரண்டாவது தவறு. உக்ரைன் மக்களுக்கு எதிராக போராடும் வெளிநாட்டினர் 150 பேர் பெயர்கள் மற்றும் பாஸ்போர்ட் விபரங்கள் சேகரித்து உள்ளோம், என்றார்.



அதேநேரத்தில் சீன வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் லின் ஜியான், "ரஷ்யா உடன் இணைந்து போரில் சீனர்கள் ஈடுபட்டதாக, ஜெலன்ஸ்கி கூறுவது ஆதாரமற்றது" என மறுப்பு தெரிவித்தார்.(ஐ)

## யாழில்...

முதல் மக்கள் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டிருந்தது.

அதனால் யாழ்ப்பாணத்தில் இருந்து பலாலி வடக்கு பிரதேசத்துக்குச் செல்லும் மக்கள் காங்கேசன்துறை சென்று அங்கிருந்தே பலாலி வடக்குக்குச் செல்லும் நிலைமை காணப்பட்டு வந்த நிலையில் குறித்த வீதியின் ஊடாகப் போக்குவரத்துக்கு அனுமதிக்குமாறு போர் நிறைவடைந்த காலம் முதல் சுமார் 15 வருட காலமாக மக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்நிலையில் குறித்த வீதி இன்று வியாழக்கிழமை முதல் பல்வேறு நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளுடன் மக்கள் போக்குவரத்துக்காகத் திறந்து விடப்பட்டப்பட்டுள்ளது.

இந்த வீதி ஊடாக காலை 6 மணி முதல் மாலை 5 மணி வரை மாத்திரமே மக்கள் பயணிக்க முடியும்.

வீதியில் பயணிப்பவர்கள் வீதியின் இடையில் வாகனத்தை நிறுத்துதல், வாகனங்களைத் திருப்புதல், பயண நேரத்தில் புகைப்படம், காணொளி எடுத்தல் ஆகிய நடவடிக்கைகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நடை பயணம் செல்வதற்கும், பஸ் தவிர்ந்த பாரவூர்திகள் குறித்த வீதியூடாகச் செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மணித்தியாலத்துக்கு 40 கிலோமீற்றர் வேகத்தில் மாத்திரமே பயணிக்க வேண்டும் என்றும், சாரதிகளுக்கான அடையாள ஆவணங்கள் கட்டாயம் வைத்திருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான கட்டுப்பாடுகளை மீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனும் அறிவுறுத்தல் பதாகை வீதியில் தமிழ் மொழியில் எழுதிக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு வெள்ளிக்கிழமை பிரதமர் ஹரிணி அமரசூரிய விஜயம் மேற்கொண்டு பல்வேறு இடங்களில் மக்கள் சந்திப்புக்களில் கலந்துகொள்ளவுள்ள நிலையில் இன்று இந்த வீதி திறக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## அச்சுவேலி...

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளரிடம் கையளிக்கப்பட்டது.

இதுவரை காலமும் மாற்றிடம் ஒன்றில் தலைமைக் காரியாலயம் இயங்கி வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## மண்டைதீவில்..

இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்சியாளரும் முன்னாள் வீரருமான சனத் ஜயசூரியவும் இந்த விஜயத்தில் பங்கேற்றார்.

மண்டைதீவுக்கு விஜயம் செய்த குழுவினர் மைதானம் அமைப்பது தொடர்பான நிலைமைகளை ஆராய்ந்தனர்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் கருணைநாதன் இளங்குமரன், விளையாட்டுத் திணைக்களத்தின் அதிகாரிகள், பிரதேச செயலாளர், இராணுவத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## தென்னக்கோனுக்கு...

பிணைகளில் அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி மாத்தறை, வெலிகம - பெலேன பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

ஆனால், தேசபந்து தென்னக்கோன் நீதிமன்ற உத்திரவை அவமதித்து சுமார் 20 நாட்களாகத் தலைமறைவாக இருந்த நிலையில், கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதி காலை மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தில் சரணடைந்த பின்னர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் இன்று மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

## நிராகரிக்கப்பட்ட...

தேர்தலுக்காக வேட்புமனுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்களில் உள்ள குறைபாடுகளை வைத்து வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்த மனுக்கள் மொஹமட் லபார் தாஹீர் மற்றும் பிரியந்த ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## பட்டலந்த....

"நல்ல வழியில் நாம் அரசியலை முன்னெடுத்து வந்த வேளை 1983ஆம் ஆண்டு எமது கட்சி தடை செய்யப்பட்டது. ஜ/லைக் கலவரத்தை அடிப்படையாகக்கொண்டே எமது கட்சி மீது தடை விதிக்கப்பட்டது. அன்று ஏற்பட்ட கறுப்பு ஜ/லை என்பது இன்றளவிலும் கறுப்புப் புள்ளியாகவே இருந்து வருகின்றது.

தடையை நீக்குமாறு ஜனாதிபதி முதல் பலரிடம் கோரிக்கை விடுத்தோம். பலன் கிட்டவில்லை. இதற்கிடையில் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டு எமது உறுப்பினர்களை கொன்றொழித்தனர்.

நாட்டை நாசமாக்குகின்ற ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டவேளை, நாடு காட்டிக்கொடுக்கப்பட்ட வேளையில்தான் அதற்கு எதிராகவே 1987 மற்றும் 1989களில் எமது வீரமறவர்கள் வீறுகொண்டெழுந்தனர். அவர்கள் கொன்று புதைக்கப்பட்டனர். இவ்வாறு புதைக்கப்பட்டவர்கள் விதைக்கப்பட்டவர்களாக மீண்டெழுந்திருக்கின்றார்கள்.

உண்மையை ஒருபோதும் மூடிமறைக்க முடியாது. உண்மைகள் தற்போது வெளிவர ஆரம்பித்துள்ளன.

பட்டலந்த வதை முகாம் கொலையாளிகள், சித்திரைவதை செய்தவர்கள், இதற்குக் காரணகர்த்தாவாக இருந்தவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும்.

வடக்கு மற்றும் மலையக மக்களுக்கும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. அவர்கள் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கெல்லாம் நீதி கிடைக்கப்பட வேண்டும்." - என்றார்.



# பீனிக்ஸ் பறவையாக மீண்டெழும் ராஜபக்சர்கள்

சமகால அரசாங்கத்திற்கு எதிரான தொழிற்சங்க போராட்டங்களை தூண்டும் செயற்பாடுகளில் நாம் ஈடுபட மாட்டோம் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விவாதத்தின் போது, ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு பதிலளிக்கும் வகையில் நாமல் ராஜபக்ச இதனை குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க வரி விதிப்பு தொடர்பில் இலங்கை எவ்வாறு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது தொடர்பிலும் நாமல் ராஜபக்ச இங்கு உரையாற்றினார்.


இதன்போது அமெரிக்க இறக்குமதிகளுக்கு விதிக்கப்படும் வரியை இலங்கை தவிர்க்க முடியாமல் குறைக்க வேண்டியிருக்கும் என்று நாமல் தெரிவித்தார்.

"நமது அரசியல் சக்திகள் தொழிற்சாலைகள் கட்டப்படும் இடங்களுக்குச் செல்லாமல் இருப்பது உங்களுக்கு அதிர்ஷ்டம். இல்லையெனில், தொழிற்சங்கங்களை பயன்படுத்தி அவற்றைத் தூண்டிவிட்டு, போராட்டங்களாக மாற்ற நாங்கள் தயாராக இல்லை என்பதில் நீங்கள் மகிழ்ச்சியடைய வேண்டும்.

அந்த வகையில் நீங்கள் அதிர்ஷ்டசாலி. ராஜபக்சர்கள் அவ்வாறான அரசியலைச் செய்வதில்லை. எங்கள் பலத்தைப் பற்றி வாதிட வேண்டாம். அதை காண்பிக்கும் நாளுக்காக காத்திருங்கள். நேரம் வரும்போது அதைக் காண்பிப்போம். இப்போது இந்த நாட்டு மக்களுக்கு உங்கள் பலத்தைக் காட்டுங்கள்.

158 அல்லது 159 பேரை இங்கே வைத்திருப்பதன் மூலம் அமெரிக்கா எங்களுக்கு எவ்வளவு வரி விதித்தாலும், நமது நாட்டின் பொருளாதாரத்தைப் பாதுகாக்க முடியும் என்பதற்கான வலிமையைக் காட்டுங்கள். அதற்கு நாங்கள் உங்களுக்கு உதவுவோம். இப்போது நீங்கள் புலம்புவதை நிறுத்திவிட்டு உங்கள் பலத்தைக் காட்ட வேண்டிய நேரம் இதுவென" நாமல் குறிப் பிட்டுள்ளார். (ஐ)

# இந்த அறிகுறிகள் இருந்தால் உடன் வைத்தியசாலைக்கு செல்லுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்



இரண்டு அல்லது மூன்று நாட்கள் காய்ச்சல் நீடிக்குமாக இருந்தால் உடனடியாக வைத்தியரை நாடுமாறு பொது மக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

நுளம்புகளால் பரவும் சிக்குன்குனியா வைரசின் பரவலில் குறிப்பிடத்தக்க அளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சமீபத்திய நாட்களில், சிக்குன்குனியா நோய்ப்பரவல் அதிகரித்து வருகின்றது. இதுவரையில் சிக்குன்குனியாவாக இருக்கலாம் என சந்தேகத்திற்கிடமான 190 நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

அவற்றில் 65 பேருக்கு நோயுறுதி செய்யப்பட்டுள்ளதாக சமூக மருத்து நிபுணர் குமுது வீரகோன் தெரிவித்துள்ளார்.

2 - 3 நாட்கள் நீடிக்கும் காய்ச்சல், மூக்கு மற்றும் கைகளில் நிறமாற்றம், தோல் வெடிப்புகள், பல ஆண்டுகளாக நீடிக்கக்கூடிய மூட்டு வலி மற்றும் அன்றாட செயற்பாடுகளைச் செய்வதில் சிரமம் ஆகியவை சிக்குன்குனியாவின் அறிகுறிகளாகும். நுளம்பு இனப்பெருக்கம் செய்யும் இடங்களைக் கட்டுப்படுத்துவது டெங்கு மற்றும் சிக்குன்குனியா நோய்ப்பரவலை குறைக்க உதவும் என்று அவர் விளக்கினார்.

சிக்குன்குனியா வைரஸ் பரவும் அபாயம் இருப்பதால், அது சார்ந்த ஏதேனும் அறிகுறிகள் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவ உதவியை நாடுமாறு சுகாதார அதிகாரிகள் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர். (ஐ)

# மான் இறைச்சி கடத்திய இருவர் கைது



கரடியனாறு பிரதேத்தில் இருந்து செங்கலடி பிரதேசத்துக்கு பட்டா ரக வாகனத்தில் மான் இறைச்சி கடத்தி சென்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் இன்று பகல் இடம் பெற்றுள்ளது.

இதன்போது 20 கிலோகிராம் நிறையுடைய மான் இறைச்சி கடத்தி செல்லப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் செங்கலடி கறுத்த பாலத்தில் வைத்து கைது செய்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கு பயன்படுத்தப்பட்ட வாகனமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுதத நடவடிக்கை முன்னெடுககப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி10.04.2025 இல் வெளியிடப்பெற்றது.